**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 200 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | **Dr.** சுகன்யா |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.11.2023**

எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரி2 இறப்பு. எதிரி 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.12.2009 ம் தேதியன்று காலை 07.50 மணிக்கு நான் மேலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது, ஜெயபால் த/பெ. கங்காணி, கொடுக்காம்பட்டி, என்பவரை கச்சிராம்பட்டி அருகே, தனக்குத் தெரிந்த 2 நபர்கள் 04.12.2009 ம் தேதியன்று காலை 07.15 மணிக்கு கையால் அடித்தாகவும் வலது கையைக் கடித்ததாகவும் சொன்னார். நான் அவரைப் பரிசோதித்தபோது, அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது :

1) வலது கையில் வீக்கக் காயம் 4 x5 செமீ பல் தடத்துடன் காணப்பட்டது.

2) முதுகில் வலி இருப்பதாகக் கூறினார்.

நான் அவரை உள்நோயாளியாக அனுமதித்து, 07.12.2009 ம் தேதியன்று discharge செய்யப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம்

சாதாரணக் காயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டு நகல் அதசாஆ.2 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்..

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**</u>

என்னிடம் சிகிச்சைக்கு வந்த ஜெயபால் என்பவர் காவல் நிலையத்தில் இருந்து மெடிக்கல் மெமொ எதுவும் கொண்டுவரவில்லை. அவரை அவரது நண்பர் ராஜ்குமார் என்பவர் அழைத்து வந்தார். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்டிருந்த பல் தட காயம் எப்போது ஏற்பட்டது என்ற காயத்தின் வயது பற்றி அதசாஆ.2 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை